

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகரம், திருமழிசை பேரூர் தி.மு.க. சார்பில் மறுசீரமைப்பு கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நகர பேரூர் கழக செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, தி.வே.முனுசாமி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மறு சீரமைப்பு பணிகளுக்கான ஆலோசனைகளை கூறி அதற்கான படிவத்தை வழங்கினார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், டி.தேசிங்கு, க.ஸ்ரீதர், இளைஞர் அணி நடுக்குத்தகை கே.சுரேஷ் குமார், வழக்கறிஞர் பெ.வினோத் உள்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

ஆட்சித் தோல்வியை மறைக்க கொச்சைப் பேச்சா ? விஜய்யின் தரம் தாழ்ந்த பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த

# திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச்செயலாளர்கள்ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்.சந்திரன் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கூட்டறிக்கை!







திருவள்ளூர்: செப்12

ஆட்சியின் தோல்விகளுக்குபதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார்” தி.மு.க. தலைமைக்கழகம், அவரது பேச்சைக் கண்டித்து தமிழகம் முழுவதும் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, இன்று12.09.2026 சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூர்மருத்துவ கல்லூரி சாலைபகுதியில்திருவள்ளூர் மத்திய, மேற்கு மற்றும் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தலைமை வகிக்கிறார். திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில்கழக கொள்கை பரப்பு செயலாளரும்அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன்தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன்பங்கேற்கிறார்கள்

எனவேதிருவள்ளூர் மத்திய, மேற்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் விஜயின் தரம் தாழ்ந்த பேச்சுக்கு எதிராகவும், ஆட்சியின் கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு, கண்டன முழக்கங்களை எழுப்பி, மக்கள் விரோதப் போக்கிற்கு எதிரான தி.மு.க.வின் ஜனநாயகக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆகியோர் கூட்டறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்டம்; கழக பொதுக்குழு உறுப்பினர்

# ஆர்.கலைச்செல்வி கணவர் எம்.இராமலிங்கம் மறைவு!

## பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. - பகுதி செயலாளர் எஸ்.முரளி அஞ்சலி!

சென்னை, செப்.12-

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57 அ வட்டத்தை சார்ந்த கழக பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி அவர்களின் கணவர் எம்.இராமலிங்கம் (வயது60) அவர்கள் உடல் நலக்குறைவால் நேற்று 10.09.26 காலை 5.00 மணியளவில் காலமானார். அன்னாரின் உடலுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

உடன் பகுதி செயலாளர் எஸ்.முரளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம். விஜயகுமார், சிறுபான்மை பிரிவு மாநில துணை அமைப்பாளர் என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.இ.கனி, சாவித்திரி வீரராகவன், பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் எல்.சம்பத் குமார், சுதாதீன தயாளன் எம்.சி., இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. மற்றும் டாக்டர் பூர்ணிமா எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் பா.அண்ணாதுரை, டி.ராஜா (எ) கதிரவன், ஆ.நா.பார்த்திபன், எல். சத்தியநாரயணன், எம்.பரத்குமார், மாவட்ட பிரதிநிதி லண்டன் முருகன், வட்ட கழக நிர்வாகிகள் கே. ஜி.துளசி ராமன், சி.காந்தி, டி.வேலு, தேவகானம் ராஜா,

அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பூக்கடை வெங்கடேசன், செந்தில்குமார், ஆர்.பி. ரமேஷ், பூக்கடை ராஜா, சித்ரா, தேன்மொழி, ராதிகா, ஆனந்தி, ராணியம்மாள், சாமந்தி, கௌரி, கல்யாணி, மஹாலக்ஷ்மி, கிருஷண வேனி, இரத்தினம், மலர், சுமதி, திலகம், அஞ்சலி, பிரபாவதி, மற்றும் நாகலட்சுமி, ரதி தேவி, இ. தாரா, கவிதா, சீதா, கலைவாணி, சத்தியராணி, சித்ரா, அனு மற்றும் கழக தோழர்களும், மகளிர்களும் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி கழக பொதுக்குழு உறுப்பினர் திருமதி. ஆர். கலைச்செல்வியின் கணவர் மறைந்த எம்.இராமலிங்கம் உடலுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் பகுதி செயலாளர் எஸ்.முரளி, சிறுபான்மை பிரிவு மாநில துணை அமைப்பாளர் என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பொதுக்குழு உறுப்பினர் எம்.இ.கனி, பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, வட்ட துணை செயலாளர் சி.காந்தி மரியாதை செலுத்தினர்.

# உளுந்தூர்பேட்டை ஜி.ஆர். வசந்தவேல் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா வரவேற்பு!

## எ.வ.வேலு தலைமை! ஆ.ராசா – கழக முன்னணியினர் முன்னிலை!



கள்ளக்குறிச்சி, செப்.12.

உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜி. ஆர். வசந்தவேல் இல்ல மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 15.9. 26. மாலை 6:00 மணி அளவில், கள்ளக்குறிச்சி டோல்கேட் அருகில் உள்ள ஏ என் பி மஹாலில் நடைபெறுகிறது. மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு, முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு தலைமை தாங்குகிறார். ஆ. ராசா மற்றும் கழக முன்னணியினர் முன்னிலை வகிக்கின்றனர்.

உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜி. ஆர். வசந்தவேல்- குணசுந்தரி ஆகியோரின் புதல்வர் வி. ராஜசேகர் என்பவருக்கும், கொண்ட சமுத்திரம் மா ராஜா என்கிற ராஜ்குமார் - ரா. சிவகாமி ஆகியோரின் புதல்வி ஆர் வைசாலிக்கும்15. 9.26 அன்று மாலை ஆறு மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி கள்ளக்குறிச்சி ஏ. என். பி. மஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. வரவேற்கிறார். முன்னாள் அமைச்சர் கழக சட்டமன்ற கொறடா எ. வ. வேலு தலைமை தாங்குகிறார்.

துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி சிறப்புரை ஆற்றுகிறார்.

தா.உதயசூரியன்.வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ முன்னிலை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர்கள் இரா. இராஜேந்திரன், எஸ். எஸ். சிவசங்கர், சி. வெ. கணேசன் மற்றும் எ. வ. வே. கம்பன், கே. திருநாவுக்கரசு, புவனேஸ்வரி பெருமாள், யு. எஸ். வைத்தியநாதன்,பா. ராஜவேலு, மா. சந்திரசேகர், செல்வம் டேனியல் ராஜ் மற்றும் கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர். கே. வி. முருகன் நன்றி கூறுகிறார்.

சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவப் பேச்சு! இன்று ஆர்ப்பாட்டத்தில்

# ஆலந்தூர் தெற்குப் பகுதி கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,செப்.12-

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - 12-வது மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (12.9.2026) காலை 10 மணி அளவில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ். ஸ்ரீதர்
## செப்டம்பர் 12 (2020)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சென்னை வடகிழக்கு- கிழக்கு- வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# சட்டமன்றத்தில் முதல்வர் ஆணவ பேச்சைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

## வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் வேண்டுகோள்!

சென்னை,செப்.12-

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சை கண்டித்து சென்னை வடகிழக்கு, கிழக்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று 12.9.2026 காலை 9 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையிலும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தின் செயலாளர், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் பி.கே. சேகர் பாபு, சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஆகியோர் முன்னிலையில் ம.ம.க. பொது செயலாளர் அப்துல் சமது மற்றும் ம.ஜ.க. துணை பொதுச் செயலாளர் கலைக்குயில் இப்ராஹிம் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றுகின்றனர்.

எனவே, கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் ஒன்றியம், பகுதி, பேரூர், கிளை, வார்டு கழகங்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி தோழர்கள் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி. மதன் குமார் தெரிவித்துள்ளார்.

முதல்வர் விஜய்யின் ஆணவப் பேச்சு!

# சைதாப்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## 124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை!

சென்னை,செப்.12-

இன்று 12-09-2026 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சைதாப்பேட்டை கலைஞர் நூற்றாண்டு நுழைவு வாயில் அருகில் த.வெ.க. தலைவர் விஜய் சட்டமன்றத்தில் ஆணவமாக பேசியதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை தென்மேற்கு கழக செயலாளர் மயிலை த.வேலு தலைமையில் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகவே இந்த ஆர்ப்பாட்டத்தில் 124வது அ வட்டத்தை சார்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள், BLA 2,BDO,BDA நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட பொறுப்பாளர் மா.பா. அன்பு தெரிவித்துள்ளார்.





சென்னை தெற்கு மாவட்டம், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நினைவில் வாழும் சைதை சம்பத் மகன் – சைதை கிழக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா சம்பத்தின் இல்ல விழாவில் முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், துணைமேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ராஜாஅன்பழகன், பகுதி கழக செயலாளர்கள், இரா.துரைராஜ், எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல்கந்தப்பன், சைதை மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், மாநில துணை அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட அமைப்பாளர் சைதைசாதிக், த.மோகன்குமார்,எம்.சி., கோட்டூர்எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, நேருநகர் எஸ்.பாட்சா, சைதை ஆ.வரதன், வே.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் பெருதிரளராக பங்கேற்று ஆர்.எஸ்.சம்ரூத் யாரனை வாழ்த்தினார்கள்.